பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 13 | வியாழக்கிழமை | 27.03.2025 | அதிர்வு 234

## கரியின் அழுத்தத்தால் பிரிட்டன் தடை விதிப்பு

**தயான் ஜயதிலக குற்றச்சாட்டு**



"இலங்கையின் முன்னாள் பாதுகாப்புத் தளபதிகளுக்குப் பிரிட்டன் தடை விதித்ததன் பின்னணியில்

07



## பிரிட்டனின் தடையால் மஹிந்த கடும் கொதிப்பு

# தமிழ் மக்களுக்கு எதிராக போர் தொடுக்கவில்லையாம்


**சகல குற்றச்சாட்டுக்களையும் அடியோடு நிராகரித்த அவர் ராணுவ நடவடிக்கை புலிகளுக்கு எதிராகவே என்றும் சுட்டிக்காட்டு**

"தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே போர் தொடுத்தோம். மாறாகத் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் தொடுக்கவில்லை." என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

06

## முன்னாள் படைத் தளபதிகளுக்கு எதிரான தடை

# இலங்கைக்கு எதிரான தடையாகவும் மாறலாம்



**இப்படி எச்சரிக்கின்றார் மஹாநாமஹேவா**

"இலங்கையின் முன்னாள் படைத் தளபதிகளுக்கு எதிராக விதிக்கப்படும் தடையானது வருங்காலத்தில் நாட்டுக்கு எதிரானதாகக் கூட மாற்றமடையலாம். எனவே, அரசு இது தொடர்பில் தீவிரமாகக் கரிசனை செலுத்த வேண்டும்."

– இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் அரசியல் ஆய்வாளருமான கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

"நாட்டின் முன்னாள் இராணுவத் தளபதிகள் இருவர்,

06

# கோப்பாயில் வயோதிபரின் சடலம் மீட்பு!



(எஸ்.ரகுதீஸ்)

பருத்தித்துறை பிரதான வீதி கோப்பாய் சந்திக்கு அருகாமையில்

06




உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் பல நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் நாளொரு பேச்சும் பொழுதொரு தகவலுமாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

நேற்று விடயம் தெரிந்த ஒரு அன்பர் அழைப்பு எடுத்தார்.

"வைத்தியர் அர்ச்சுனாவின் சுயேச்சைக் குழுவை சேர்ந்த எல்லா வேட்பு மனுக்களுமே நிராகரிக்கப்பட்டு விட்டன. யாழ். மாநகர சபைக்கு அவரின் சுயேச்சைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுவில் அவரால் தங்கமெனச் செல்லமாக அழைக்கப்பட்டு வரும் கௌசல்யா மாத்திரமே ஒப்பமிடவில்லை. அவர் ஒப்பமிடா விட்டால் வேட்பு மனுவில் அவரது பெயரை ஏற்காமல் நிராகரித்துவிட்டு, அந்த வேட்பு மனுவை ஏற்று இருக்கலாம்தானே? கௌசல்யாவின் பெயர் ஏற்றுக் கொள்ளாமல் விடுபட்டாலும் அந்தப் பட்டியலில் மகளிர் பிரதிநிதித்துவமோ, இளைஞர் பிரதிநிதித்துவமோ குறைய மாட்டாது

06




# முன்னாள் இராணுவ பிரதானிகள் உள்ளிட்ட நால்வருக்கு ஐக்கிய இராச்சியம் விதித்த தடை ஒருதலைப்பட்சமானது

## வெளிவிவகார அமைச்சு அறிக்கை

முன்னாள் இராணுவப் பிரதானிகள் மூவர் உள்ளிட்ட நால்வருக்கு தடைகளை விதிப்பதற்கு ஐக்கிய இராச்சியம் எடுத்த தீர்மானம் ஒருதலைப்பட்சமானது என வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரை இன்று சந்தித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இலங்கையின் நிலைப்பாட்டை அறிவித்துள்ளார்.

இலங்கையில இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது மனித உரிமைகளை மீறியமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக குறிப்பிட்டு ஓய்வுபெற்ற ஜெனரல் சவேந்திர சில்வா, ஓய்வுபெற்ற அட்மிரல் ஒவ் த ஃப்லீட் வசந்த கரன்னாகொட, ஓய்வுபெற்ற ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஆகியோருக்கு தடை விதிப்பதாக ஐக்கிய இராச்சியம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

இவர்களை தவிர விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதிகளில் ஒருவரான கருணா அம்மான் என்றழைக்கப்படுகின்ற விநாயகமூர்த்தி முரளிதரனுக்கும் ஐக்கிய இராச்சியம் தடைகளை விதித்துள்ளது.

அதற்கமைய மேற்படி நால்வரும் ஐக்கிய இராச்சியத்திற்கான பயணங்களை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் அந்நாட்டிற்குள் சொத்துக்களை சேகரித்து வைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாடுகள் மேற்கொள்ளும் இத்தகைய ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கம் எவ்வித ஒத்துழைப்பையும் வழங்காது என ஐக்கிய இராச்சியத்தின் இந்த தீர்மானத்திற்கு பதிலளிக்கும் வகையில் வெளிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளை மேலும் சிக்கலுக்குள்ளாக்குவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான உள்ளகப் பொறிமுறையை வலுப்படுத்தும் செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதுடன் கடந்த காலத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்குமாயின் அது தொடர்பாக உள்ளகப் பொறிமுறையின் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பெட்ரிக்கிடம் வெளிவிவகார அமைச்சில் வைத்து நேற்று தெரிவித்துள்ளார்.

# தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நிவாரண விலையில் உணவுப்பொதி



தமிழ் – சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தகைமையுடைய பயனாளிகளுக்கு "காலத்தின் தேவைக்கான உணவுப் பொதியை" சதொச மூலம் வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அதற்கமைய 5,000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய "காலத்தின் தேவைக்கான உணவுப்பொதி", சலுகை விலையில் 2,500 ரூபாவிற்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்காக அஸ்வெசும திட்டத்திற்காக புதிதாக விண்ணப்பித்துள்ள 812,753 விண்ணப்பங்களில் தகைமையுடைய பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் முதலாம் முதல் 13ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சதொச கூட்டுறவு நிலையங்கள் ஊடாக இந்த உணவுப்பொதியை பயனாளிகள் பெற்றுக் கொள்ள முடியும்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# பூநகரி பிரதேச சபைக்கு தமிழரசுக் கட்சி வேட்புமனு

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச சபைக்கான வேட்புமனுவை இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் நேற்று தாக்கல் செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் நடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தலைமையில் வடக்கு மாகாண மேனாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, கட்சியின் மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், மேனாள் தவிசாளர்களான சிவகுமாரன் ஶ்ரீரஞ்சன், அருணாசலம் வேழமாலிகிதன், சுப்பிரமணியம் சுரேன் மற்றும் பூநகரி பிரதேச சபையின் வேட்பாளர்கள் உள்ளிட்டோர் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம், புனித திரேசாள் தேவாலயம் மற்றும் கிளிநொச்சி நகர சித்தி விநாயகர் ஆலயம் என்பவற்றில் சமயாசார வழிபாடுகளில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, மேற்படி சபைக்கான வேட்புமனு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.











# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



## மன்னார் பிரதேச சபையை சங்கு அணி கைப்பற்றினால் கனிய வளங்கள் பாதுகாக்கப்படும் என்கின்றது ரெலோ!

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் தீவுப் பகுதியில் முன்னெடுக்கப்பட உள்ள கனிய மணல் அகழ்வை நிறுத்தி, கனிய வளங்களைப் பாதுகாக்க மக்கள் மன்னார் பிரதேச சபைத் தேர்தலில் சங்குச் சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை ஆதரித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் எனத் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியின் மாவட்ட அமைப்பாளர் டானியல் வசந்தன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் பிரதேச சபைக்கான வேட்பு மனு நேற்றைய தினம் புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி சார்பாக கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் ஒரு முக்கியமானதாக அமைந்துள்ளது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் டைட்டானியம் எனப்படுகின்ற கனிய மணல் அகழ்வு செய்வதற்கு பல்வேறு கம்பெனிகள் போட்டி போட்டுக் கொண்டு இருக்கின்றன.

இத்தருனத்தில் மன்னார் பிரதேச சபையை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கைப்பற்றுமாக இருந்தால் கனிய வளங்கள் பாதுகாக்கப்படும்.

எனவே மன்னார் பிரதேச மக்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை வெற்றி பெறச் செய்து கனிய வளங்களைப் பாதுகாக்க உறுதுணையாக இருக்க வேண்டும்.

மன்னார் பிரதேசசபைத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி வெற்றி பெற்று சபையை அமைக்கும். – என அவர் மேலும் நம்பிக்கை தெரிவித்தார்.





## சிறிரெலோவின் வழக்கு இன்று உயர் நீதிமன்றுக்கு வருகின்றது

**(கி.வசந்தன்)**

உள்ளூராட்சி சபை தேர்தலில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு ஜனநயாக தேசிய கூட்டணியினால் (தபால் பெட்டி சின்னம்) கையளிக்கப்பட்ட வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து அக்கட்சியின் தேர்தல் முகவரும், கூட்டணி கட்சியான சிறிரெலோ கட்சியின் செயலாளருமான ப.உதயராசா சார்பில் உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு இன்றைய தினம் நீதிமன்றில் பரிசீலனைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, கடந்த 2024 நாடாளுமன்ற தேர்தலின் போதும் வன்னி தேர்தல் மாவட்டத்தில் இதே கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டு பின்னர் உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணையின் பின்னர் மீளவும் வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்








# சுபநேரத்தில் நாட்டை அநுரவிடம் கையளித்த மக்களின் வாழ்க்கை போராட்டமாகியுள்ளது

## சஜித் பிரேமதாஸ கவலை

சுப நேரத்தில் நாட்டை அநுரவிடம் கையளித்துவிட்டு தற்போது நாட்டு மக்கள் வாழ்வதற்கே பெரும் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போது பொருள்களின் விலைகள் அதிகரித்து, கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மிதமிஞ்சிய அழுத்தங்களால் நாட்டு மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். சிலர் மூன்று வேளைகளும் உண்ண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது, அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு மேலும் வரி விதிக்கப்பட்டு வருகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் அடிமையாகி, அதன் கைதியாக மாறி, அவர்களின் தாளத்துக்கு ஏற்ப தனது செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது இந்த நிலையில் தற்போதைய அரசாங்கம் நாட்டு மக்களை மறந்து, பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தவறியுள்ளது.” என்றார்.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று கூறுகிறார்கள். அப்படி இருக்கையில் அந்த வேட்பு மனுப் பட்டியலில் ஒருவரின் பெயரை நிராகரித்தது விட்டு விட்டு, ஏனையவற்றை ஏற்காமல் விட்டமை சரியா?" – என்ற சாரப்பட அவர் கேள்வி எழுப்பினார்.

நியாயமான கேள்விதான். ஆயினும் நான் அவருக்கு ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினேன்.

"இந்த வேட்பு மனுக்கள் யாவும் தனியாக வைத்தியர் அர்ச்சனாவின் சுயேச்சைக் குழுக்கள் என்றாலும் தேர்தல் ஆணையத்தைப் பொறுத்தவரை அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தலில் போட்டியிடுவதற்குத் தனித்தனியாகச் சமர்ப்பிக்கப்பட்ட வெவ்வேறு சுயேச்சை குழுக்களின் மனுக்கள்தான். ஒரே அணியின் மனுக்களாக அவற்றை தேர்தல் ஆணையம் அணுகாது. யாழ் மாநகர சபைக்கு கௌசல்யா உட்பட்ட சுயேச்சை குழுவினர் சமர்ப்பித்த வேட்பு மனுவின் தலைமை வேட்பாளர் கௌசல்யாதான். அவருடைய வேட்பு மனு ஏற்கப்படாமல் விட்டால் அவர் தலைமை தாங்கும் வேட்பு மனு நிராகரிக்கப்படும். தலைவர் இல்லாத சுயேச்சைக் குழுவின் வேட்பு மனுவை தேர்தல் ஆணையம் ஏற்றுக்கொள்ளாதல்லவா?" – என்று நான் விளக்கமளித்தேன். அவர் ஒப்புக்கொண்டார்.

வைத்தியர் அர்ஜுனாவுக்கும் அவரது செல்லத் தங்கத்துக்கும் இடையே இப்போது முரண்பாடு என்று பேச்சு அடிபடுகின்றது. உண்மையாகவும் இருக்கலாம். அது ஊடலாகவும் இருக்கலாம். பின்னர் கூடலாவதற்கும் வாய்ப்பு இல்லாமலில்லை.

ஆயினும், வைத்தியர் அர்ச்சுனா உரிய முறையில் தமது அரசு சேவையில் இருந்து விடுப்பு பெறாமல் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டமை தவறானது என்று வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அது விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளது.

அந்த வழக்கின் விசாரணை பூர்த்தியானால் வைத்தியரின் செல்லத் தங்கம் வைத்தியரின் இடத்துக்கு நாடாளுமன்றத்துக்கு செல்லக்கூடிய வாய்ப்பு இருப்பதையும் மறுத்து விட முடியாது.

+ + +

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக சமர்ப்பித்த வேட்பு மனுக்களில் யாழ் மாவட்டத்தில் ஒன்பதும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒன்றும், வன்னி மாவட்டத்தில் ஒன்றுமாக மொத்தம் 11 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. இவை தொடர்பில் வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விட்டன என சங்குக் கூட்டணியின் சார்பில் கொழும்பில் இவ்விடயங்களைக் கையாளும் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். எனினும், கொழும்பு நீதிமன்ற செய்திகளில் இருந்து அதனை நேற்று மாலை வரை உறுதிப்படுத்த முடியவில்லை.

சங்கு கூட்டணியின் சார்பில் இவ்விடயங்களை ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் கையாளுகின்றார் எனக் கூறப்பட்டது. அவரிடம் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் நேற்று புதன்கிழமை உயர்நீதிமன்றத்தில் எத்தனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன என்று கேட்கப்பட்ட போது அது பற்றிய விபரத்தை நாளைதான் (அதாவது இன்று தான்) தெரிவிக்க முடியும் என அவர் நேற்றுக் கூறியுள்ளார்.

பல தரப்புகளுக்கும் வழக்குகளை தாக்கல் செய்வதற்கு பெரும் நிதி நெருக்கடி இருப்பதாக கூறப்படுகிறது. கொழும்பில் வழக்கு என்று வந்து விட்டாலே கட்சியை விற்றுப் பணம் செலவழிக்க வேண்டும் என்று சில வட்டாரங்கள் முணுமுணுக்கின்றன.

தமிழ் மக்கள் கூட்டணி கூட நீதிமன்ற செலவினங்களை அறிந்து, மலைத்து, அதன் காரணமாக யாழ் மாநகர சபை வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக மட்டும் வழக்குத் தாக்கல் செய்வதோடு தனது வழக்குத் திட்டத்தை ச்சுருக்கிக் கொண்டு விட்டதாக அறிய வருகிறது.

இந்த விடயத்தில் வழக்கு விவகாரங்கள் நீண்ட பல தசாப்தங்களாகவே களைக்காமல், அலையாமல், நிதிச்செலவினம் குறித்து அலட்டிக் கொள்ளாமல், துணிந்து ஈடுபடும் தமிழர் தரப்பு தமிழரசுக் கட்சிதான்.

அண்மைக் காலத்தில் தமிழரசு கட்சி வைத்த – எதிர்கொண்ட – வழக்குகள் ஏராளம். ஆனாலும் அக்கட்சி நிதி பிரச்சினைக்காக வழக்கு விடயத்தில் துவண்டு போக சந்தர்ப்பமே ஏற்படவில்லை. ஆளுமை மிக்க ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கட்சியின் வசம் இருப்பது இவ்விடத்தில் ஒரு 'பிளஸ் பொயிண்ட்' தான்....!

## தமிழ் மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், இலங்கையின் முன்னாள் படைத் தளபதிகளுக்கு எதிராகப் பிரிட்டனால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளையும் அவர் முற்றாக நிராகரித்துள்ளார்.

போரின்போது மனித உரிமைகள் மீறப்படவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரிட்டனால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாதவை என்றும் விசேட அறிக்கையொன்றின் ஊடாக மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

தமது அரசு சமாதானத்தையே விரும்பியது என்றும், தமிழீழ விடுதலைப் புலிகளின் உக்கிர தாக்குதல்களால்தான் இராணுவநடவடிக்கையை முன்னெடுக்கநேரிட்டது என்றும் மஹிந்த ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளார்.

## கோப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ள கழிவு வாய்க்காலில் இருந்து அடையாளம் காணப்படாத வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக்கு முன்பாக உள்ள கழிவு வாய்க்காலில் நேற்று புதன்கிழமை நண்பகல் சடலம் காணப்படுகின்றது என்று கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம், சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் அதை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## இலங்கைக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் கடற்படைத் தளபதி ஒருவர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்த ஒருவர் ஆகியோருக்கு எதிராகப் பிரிட்டன் பயணத் தடை விதித்துள்ளது.

தற்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத் தொடர் இடம்பெற்று வருகின்றது.

எந்தவொரு நாட்டுக்கு எதிராகவும் கொண்டுவரப்படும் யோசனைகளிலிருந்து அமெரிக்கா விலகியிருக்கின்றது. அமெரிக்காவின் எவ்வித ஒத்துழைப்பும் இன்றியே இது இடம்பெறுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் தான் ஏதேனுமொரு நாட்டுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனில், அவை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கப்படும். ஆனால், மனித உரிமைகள் பேரவையால் தடைகளை விதிக்க முடியாது. பாதுகாப்புச் சபைக்குச் சென்ற பின்னரே இது குறித்த தீர்மானங்களை எடுக்க முடியும்.

ஆனால், இங்கு அவ்வாறு எந்த நடைமுறையும் இடம்பெறவில்லை. தடை விதிப்பதாயின் ஒரு நாட்டுக்கு எதிராகக் கூட விதிக்க முடியும். இதற்கு முன்னர் எமது இராணுவத்தினர் 58 பேருக்கு எதிராக அமெரிக்கா தடை விதித்திருக்கின்றது. அந்த வழியில்தான் தற்போது பிரிட்டனும் இவ்வாறு தடை விதித்துள்ளது.

அடிப்படை மனித உரிமை மீறல்கள், பாலியல் வன்கொடுமைகள் முதலான காரணிகளை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு நபர்களுக்கு எதிராக விதிக்கப்படும் தடையானது ஒரு சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு எதிரானதாகக் கூட மாற்றமடையக் கூடும்.

இவ்வாறான நிலைமையை நாமே உருவாக்கிக்கொண்டோம். அதற்கு சிறந்த உதாரணம் 2015ஆம் ஆண்டு அரசு தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவொன்றை நியமித்து பரிந்துரைகளை வழங்கியது. ஆனால், இன்னும் அவை நடைமுறைப்படுத்தப் படவில்லை.

இவ்வாறு தேசிய ரீதியில் பல்வேறு ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், அந்த ஆணைக்குழுக்களில் உள்ள நிபந்தனைகள் எந்தவொரு அரசாலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஏனைய நாடுகளிலுள்ள புலம்பெயர் இலங்கையர்களுக்குச் சார்பானவர்களது அழுத்தங்களும் இதில் தாக்கம் செலுத்துகின்றன.

வெறுமனே முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு தடை விதிக்க முடியும்?

எவ்வித விசாரணைகளும் இன்றி பக்கசார்பாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அடிப்படையின்றி எடுக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்துக்கு எதிராக அரசு என்ற ரீதியில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை பொருளாதாரக் குற்றமிழைத்துள்ளது என்று யோசனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவ்வாறெனில் இதனை அடிப்படையாகக் கொண்டு நாட்டுக்குத் தடை விதிக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் கூட காணப்படுகின்றது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கூட நீக்கப்படக்கூடிய வாய்ப்புள்ளது. இஸ்ரேல், மியன்மார் போன்ற நாடுகளில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லையா? எதற்காக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை மாத்திரம் இலக்கு வைக்கப்படுகின்றது?

எனவே வெளிநாட்டலுவல்கள் அமைச்சு இலங்கையில் உள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகரகத்திடம் இது குறித்து தெளிவுபடுத்த வேண்டும். இனிவரும் காலங்களிலாவது இவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்படுவதை தடுப்பதற்குத் தற்போதைய அரசாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்." – என்றார்.

# தேசிய பாதுகாப்பு தொடர்பில் தகவல் வழங்குமாறு கோரிக்கை

தேசிய பாதுகாப்பு விடயம் தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைக்குமாயின் அதனை உரிய தரப்பினருக்கு அறிவிப்பதற்கான பொறுப்பு நாட்டின் சகல பிரஜைகளுக்கும் இருப்பதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், ஏப்ரல் 21 தாக்குதல்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தில் இயங்குவதாகக் கூறப்படும் ஒரு தீவிரவாதக் குழு குறித்து கலகொட அத்தே ஞானசார தேரர் வெளியிட்ட அறிக்கை தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய பாதுகாப்பு விடயம் தொடர்பில் ஜனாதிபதியினால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதில்லை. குற்றபுலனாய்வு திணைக்களம் அதேபோன்று புலனாய்வு பிரிவு தொடர்பில் தேரர் நன்கு அறிந்துள்ளார்.

ஆகவே, தேசிய பாதுகாப்பு விடயம் தொடர்பில் தகவல் தெரியுமாயின் அதனை அவர்களிடம் வெளிப்படுத்த முடியும்.

குற்றப் புலனாய்வு திணைக்களம் இந்த விடயம் தொடர்பில் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் தகவல்களை சேகரித்து




வருகிறது.

இந்த நிலையில், எந்தவொரு தரப்பினரும் அறிந்திராத தகவல்கள் தேரரிடம் இருக்குமாயின் அதனை சம்பந்தப்பட்ட தரப்பிருக்கு தெரியப்படுத்துவது அவரது பொறுப்பாகும்.

எனவே, தேசிய பாதுகாப்பு விடயம் தொடர்பில் தகவல் கிடைக்கப் பெறுமாயின் அதனை உரிய தரப்பினருக்கு அறிவிப்பதற்கான பொறுப்பு நாட்டின் பிரஜை என்ற வகையில் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு இருக்கிறது." என்றார்.

# காணமல் போனோருக்கான அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல்



மனிதப் புதைகுழிகள் தொடர்பாகவும் காணமல் போனோருக்கான அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடல் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றிருந்தது.

காணமல் போனோருக்கான அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கலந்துரையாடல் நிகழ்வில் காணமல் போனோருக்கான அலுவலகத்தின் தலைமை அலுவலக நிர்வாக நிறைவேற்று அதிகாரி ஜே.தற்பரன், இயக்குநர் சபை உறுப்பினர் ரி.ஜோகராஜா, பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அதிகாரி கனிஷ்க, யாழ் மாவட்ட பிராந்திய இணைப்பாளர் ரி.செல்வக்குமார், சட்டத்தரணி புரதாரணி, தலைமை நிலைய உத்தியோகத்தர்கள், யாழ் மாவட்ட பிராந்திய அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ் மாவட்டத்தில் இருந்து செயற்படும் ஊடகவியலாளர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

## கரியின் அழுத்தத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கனடா மற்றும் அந்த நாட்டின் நீதி அமைச்சர் கரி ஆனந்த சங்கரியின் அழுத்தம் காணப்படுகின்றது."

– இவ்வாறு முன்னாள் சிரேஷ்ட இராஜதந்திரிகளில் ஒருவரான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், "கனடாவின் புதிய நீதி அமைச்சர் கரி ஆனந்தசங்கரி என்பவர், இலங்கையில் இடம்பெற்ற போரின்போது இன அழிப்பு இடம்பெற்றது என்று கனேடிய நாடாளுமன்றில் யோசனை ஒன்றை முன்வைத்து பெரும்பான்மையுடன் நிறைவேற்றிய அரசியல்வாதியாவார்.

இது முற்றிலும் இராஜதந்திர ரீதியான தாக்குதலாகும். எனவே, இலங்கை வெளிவிவகார அமைச்சு பிரிட்டன் உயர்ஸ்தானிகரை அழைத்து இது தொடர்பில் வினவியிருக்க வேண்டும்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## திருந்தவே திருந்தாது கொழும்பு!

இலங்கையில் உள்நாட்டுப் போரின் போது இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக மூன்று படைத்தளபதிகள் மற்றும் படைத்தரப்புக்கு உதவியாக செயற்பட்ட துணைப்படை குழுவின் பொறுப்பாளரான கருணா ஆகியோருக்கு எதிராக பிரிட்டன் அரசு எடுத்துள்ள பயணத் தடை நடவடிக்கை தொடர்பில் இலங்கை வெளி விவகார அமைச்சின் பிரதிபலிப்பு நகைச்சுவைக் குரியதாக இருக்கின்றது.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கான உள்நாட்டுப் பொறிமுறைகளை வலுப்படுத்தும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாம். கடந்த காலங்களில் ஏதேனும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று இருந்தால் அவை தொடர்பில் உள்நாட்டுப் பொறுப்புக் கூறல் பொறிமுறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமாம். அப்படி இருக்கையில் இந்த விடயத்தில் பிரிட்டிஷ் அரசு எடுத்த நடவடிக்கை ஒருதலைப் பட்சமானதாம். இலங்கையில் உள்நாட்டு நல்லிணக்க செயல்முறைக்கு எந்த ஆதரவையும் இந்த நடவடிக்கை வழங்காதாம். அது நிலைமையை மேலும் குழப்பமடையச் செய்வதையே நோக்கமாகக் கொண்டதாம்...!

- இப்படி எல்லாம் இலங்கை வெளி விவகார அமைச்சு, விடயம் தெரிந்தவர்கள் காதில் பூ சுற்றுவது போல கருத்து வெளியிட்டு இருக்கின்றது.

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்து 16 ஆண்டுகள் ஆகின்றன. இன்னமும் கூட பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கான உள்நாட்டு பொறிமுறைகள் வலுப்படுத்தும் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவேயில்லை. நீதியை நிலைநாட்டும் செயற்பாடுகளோ, நடந்த உண்மைகளை கண்டறியும் 'உண்மையான' நடவடிக்கைகளோ கூட முன்னெடுக்கப்படவில்லை. சர்வதேச நியமங்களுக்கு அமைவான நீதி விசாரணைகளுக்கு எந்த முயற்சியும் நடக்கவில்லை. கடந்த 16 ஆண்டுகளாக இந்த விடயங்களில் தொடர்ந்து வெறும் வாய்ப் பந்தல் பேச்சுக்களை மட்டும்தான் கொழும்பு அரசுகள் தொடர்ந்து வந்தன. அவற்றைச் சகிக்க முடியாத கட்டத்தில் தான் அமெரிக்கா, கனடா, பிரிட்டன் போன்ற மேற்கு நாடுகள் தங்கள் அதிருப்தியை இத்தகைய பயணத்தடைகள் மூலம் வெளிக்காட்டத் தொடங்கி இருக்கின்றன. இவை சர்வதேச நாடுகளின் அதிருப்தி பற்றிய வெளிப்பாட்டின் ஆரம்பம்தான். போகப் போக தீவிரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம். அதுவும், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் ஆகியவை தொடர்பில் கிடைக்கக்கூடிய ஆவணங்கள், ஆதாரங்கள், சாட்சியங்களைத் திரட்டிப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் முன்னெடுத்து வருகின்ற பின்னணியில், சர்வதேச நாடுகளின் காத்திரமான பிரதிபலிப்புகள் எதிர் வரும் காலத்தில் இன்னும் மோசமானவையாக - தீவிரமானவையாக - இருக்கும்.

பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கான உள்நாட்டுப் பொறிமுறைகளை வெளிப்படுத்தப் போகின்றோம் என்று வருடங்கள் தோறும் இலங்கை கூறிக் கொண்டிருக்கும் சமாதானத்தை இனிமேலும் சர்வதேசம் சகிக்க மாட்டாது என்பதை சர்வதேசத்தின் காதில் தொடர்ந்து பூச்சுற்ற முயலும் கொழும்பு புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால், பிரிட்டனின் இப்போதைய பயணத்தடை அறிவிப்புக்கு எதிராக - ஆட்சேபமாக - இலங்கை வெளி விவகார அமைச்சு இப்போது முன் வைத்துள்ள பிரதிபலிப்பு கொழும்பு இவ்விடயத்தில் தன்னுடைய பேரினவாதப் போக்கிலிருந்து திருந்தப் போவதே இல்லை என்பதை உறுதிப் படுத்தி நிற்கின்றது என்பதுதான் இதில் அடங்கியுள்ள உண்மையாகும்.

# மத்திய மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் சானக கைது



மத்திய மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் சானக ஐலப் பெரும லஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு வால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரச பணியைப் பெற்றுத் தருவதாகக் கூறி கையூட்டலாக 3,50,000 ரூபா பணம் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டில் சானக ஐலப்பெரும கைது செய்யப்பட் டுள்ளார். கண்டியில் வைத்தே சானக ஐலப்பெருமவை கைது செய்துள் ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கண்டி நீதவான் நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத்தப்பட்ட பின்னர் நாளை வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அன்றைய தினம் சந்தேக நபர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# வாகன விபத்தில் குடும்பப் பெண் பலி

(எஸ்.ரகுதீஸ்)

தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற மகளை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்த தாயார் மகேந்திரா வாகனம் மோதியதில் உயிரிழந்துள்ளார்.

31 ஆம் கட்டை, முழங்காவிலைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான கமல் நகுலமலர் (வயது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி குடும்பப் பெண், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில், தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற மகளை அழைத்துக் கொண்டு முழங்காவில் வீதியின் இடப் பக்கமாக நடந்து சென்று கொண்டிருந்த போது பின்னால் வேகமாக வந்த மகேந்திரா வாகனம் அவரை மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்று முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளது.

இந்த விபத்தில் படுகாயம் அடைந்த குடும்பப் பெண் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு இரவே உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை முழங்காவில் பொலிஸார் நெறிப்படுத்தினர்.








# கட்சி பேதமின்றி செயற்படும் அரசுக்கு ஜூலி சங் பாராட்டு

பெருந்தோட்ட மக்களுக்கு வீட்டுவசதி மற்றும் ஏனைய சலுகைகளை வழங்குவதில் கட்சி பேதமின்றி புதிய அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்னவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதற்கு தேயிலை, தேங்காய் மற்றும் இறப்பர் தொழிற்துறைகளில் செயல்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எதிர்காலத்தில் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

# ஏப்ரல் 3 முதல் 10 வரை வடக்கு, கிழக்கில் மழை

## நாகமுத்து பிரதீபராஜா தெரிவிப்பு



வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுகளின் போட் பிளேயருக்கு அண்மையாக எதிர்வரும் 03 ஆம் திகதி காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

காலநிலை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இது எதிர்வரும் 5 ஆம் திகதியளவில் தாழமுக்கமாக வலுப்பெற்று மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் இதன் நகர்வுப் பாதை மற்றும் கரையைக் கடக்கும் இடம் பற்றி அடுத்த சில நாள்களின் பின்னரே உறுதிப்படுத்த முடியும். இத்தாழமுக்கம் காரணமாக எதிர்வரும் 03 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதிவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

சிறு போக நெற் செய்கைக்கான ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் இதனைக் கருத்தில் கொண்டு செயற்படுவது சிறந்தது.

அதேவேளை எதிர்வரும் 05 ஆம் திகதி முதல் 09 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்ப்பது சிறந்தது என அவர் அறிவித்துள்ளார்.

# மோ. சைக்கிள் மோதி படுகாயம் அடைந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி மரணம்

(எஸ்.ரகுதீஸ்)

வீதியைக் கால்நடையாகக் கடந்த போது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயம் அடைந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நாலாம் வட்டாரம், மண்கும்பானைச் சேர்ந்த ஏரம்பு தட்சணாமூர்த்தி (வயது 75) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி பூப்புனித நீராட்டு விழா ஒன்றுக்குச் சென்று விட்டு பிற்பகல் வேலணை – மண்கும்பான் வீதியை வேலணை பிரதேச செயலகத்துக்கு அருகாமையாகக் கடந்தபோது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதித் தள்ளியது.

இதில் படுகாயம் அடைந்தவர் வேலணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று புதன்கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.



# வெள்ளவத்தை கடல் பகுதிக்கு செல்லும் மக்களுக்கு எச்சரிக்கை

வெள்ளவத்தை, கல்கிசை, பாணந்துறை கடற்பகுதிகளில் மீண்டும் முதலைகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை உயிர்காப்பு சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்கத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அசங்க நாணயக்கார தெரிவித்தார்.

மேற்படி கடற்பகுதிகளுக்கு செல்லும்போது எச்சரிக்கையாக செயற்படுமாறு அவர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த விடயம் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை உயிர்காப்பு சங்கத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அசங்க நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

# அனைத்து முன்பள்ளிகளிலும் பொதுபாடத்திட்ட பரிந்துரை



அனைத்து முன்பள்ளிகளிலும் பொதுவான பாடத்திட்டத்துக்கான பரிந்துரைகளை அறிமுகப்படுத்த மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

முன்பள்ளிகளுக்காக தேசிய கொள்கையொன்றை அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு இணையாக இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் 13,000 பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளும் பதிவு செய்யப்படாத 3,000 முன்பள்ளிகளும் காணப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் முன்பள்ளி கட்டமைப்பு நவீனமயப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்துக்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக கல்வியமைச்சின் பங்களிப்புடன் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

09 மாகாணங்களிலும் உள்ள அனைத்து முன்பள்ளிகளிலும் ஒரே கொள்கையின் கீழ் இதனை நடைமுறைப்படுத்துவதே தமது எதிர்பார்ப்பு எனவும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

# ஊழல் எதிர்ப்பு தேசிய செயற்திட்டம் தொடர்பான ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

ஊழல் எதிர்ப்பு தேசிய செயற்திட்டத்தை இந்த வருடம் முதல் 2029ஆம் ஆண்டுவரை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு தொடர்பான விடயங்களை விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடருவதுடன், நாடளாவிய ரீதியில் அவற்றை ஒழித்தல் போன்றவை கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிகளாக உள்ளன.

தற்போதைய அரசாங்கத்தின் க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டமானது இலங்கையை விழுமிய ரீதியான அபிவிருத்தி மட்டத்துக்கு உயர்த்துவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது, அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கி பலம்வாய்ந்த ஊழல் எதிர்ப்பு கொள்கையைத் தயாரித்து அமுல்படுத்த வேண்டிய தேவைகுறித்து கண்டறியப்பட்டுள்ளது.

ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் கடப்பாடுகளுக்கு இணங்க இலங்கையில் கையூட்டல் மற்றும் ஊழலுக்கு எதிரான முதலாவது தேசிய செயற்திட்டம் 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டுவரை நடைமுறைப்படுத்தப்பட்டது.

மீண்டும் குறித்த தேசிய செயற்திட்டம், மீளாய்வு செய்யப்பட்டு சர்வதேச பங்காளர்களின் பங்கேற்புடன் இந்த வருடம் தயாரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஐஸ் போதைப் பொருள் வியாபாரி வாழைச்சேனைப் பகுதியில் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாழைச்சேனையில் போதை பொருள் வியாபாரி ஒருவரை 9 கிராம் 30 மில்லிக்கிராம் ஐஸ் போதை பொருளுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்து ஒப்படைத்துள்ளனர் என வாழைச்சேனை பொலிசார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து நேற்று முன்தினம் இரவு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரி.மேனன் தலைமையிலான குழுவினர் வாழைச்சேனை கோழிக்கர் வீதியிலுள்ள வீடு ஒன்றை முற்றுகையிட்டனர்

இதன்போது வியாபாரத்துக்கா வைத்திருந்து 9 கிராம் 30 மில்லிக் கிராம் ஐஸ் போதைப் பொருளைக் கைப்பற்றியமையுடன் 28 வயதுடைய வியாபாரியைக் கைது செய்து ஒப்படைத்துள்ளனர்.

# இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசுகள் மட்டப் பேச்சுக்கு வலியுறுத்துகிறோம்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் தெரிவிப்பு

(கி.வசந்தன்)

இலங்கை – இந்திய மீனவர் பிரசினையைத் தீர்ப்பதற்கு அரச மட்ட பேச்சுகளை முன்னெடுத்து, பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு எட்ட வேண்டும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னராசா தெரிவித்தார்.

இலங்கை – இந்திய மீனவர் சங்க தலைவர்களுக்கிடையிலான இரு தரப்பு பேச்சு வவுனியா ஹொரவப் பொத்தானை வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. இதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் – 2016 ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற பேச்சுக்களில் இலங்கை – இந்திய வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இன்று வரை நடைமுறை படுத்தாமையினால் தமிழ் நாட்டிலும் வடமாகணத்திலும் மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.




எனவே, கடந்த 9 வருடங்களாக நடவடிக்கை மேற்கொள்ளாததையிட்டு இரு நாட்டு மீனவர்களும் 9 வருடங்களுக்கு பின்பு கலந்துரையாடியுள்ளோம். இந்த கலந்துரையாடல் மூலம் நாம் மிக்க மகிழ்ச்சியடைந்துள்ளோம்.

இரு நாட்டிலும் பாதிக்கப்படுபவர்கள் மீனவர்களே. எனவே இதனை தீர்க்க வேண்டிய அவசியத்தினையும் அதற்கான பொறிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளோம். இதன் அடுத்த கட்டமாக இலங்கையின் கடற்றொழில் அமைச்சரும் அதிகாரிகளும் அதே போன்று இந்திய பிரதமர் மற்றும் தமிழ் நாடு முதலமைச்சர் ஆகியோர் இந்த பிரச்சினையை அரச மட்ட பேச்சுவார்த்தையாக கொண்டு சென்று அதனூடாக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதை இரு அரசாங்கங்களுக்கும் வலியுறுத்தி முன்வைக்கிறோம்.

அதேபோல தொடர்ச்சியாக இரு நாட்டு மீனவர்களும் கலந்துரையாடுவதுடன், இரு நாட்டு கடல்வளமும் பாதுகாக்கப்படவேண்டும் என்ற விடயத்தில் இருதரப்பும் இணங்கியிருக்கின்றன. அத்துடன் தமிழ் நாட்டின் ஏனைய மாவட்டங்களை சேர்ந்த மீனவர்களுடனும் கலந்துரையாடி இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஆரம்ப முயற்சியாக இந்த பேச்சு அமைந்துள்ளது.

எனவே, இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கான தீர்வு அரசின் அனுசரணையோடு மிகவிரைவில் எட்டப்படும். எட்டுவோம் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளது. இது மனிதாபிமானத்தோடு கையாளவேண்டிய விடயம். இந்த கலந்துரையாடல் தொடரும். – எனத் தெரிவித்தார்.

# இந்திய - இலங்கை மீனவர்கள் தொப்புள் கொடி உறவாக கடற்றொழில் செய்ய இரு அரசுகளும் தீர்வு காண வேண்டும்

## இராமேஸ்வரம் விசைப்படகு மீனவ சங்கத்தின் தலைவர் ஜேசுராஜா வலியுறுத்து

(கி.வசந்தன்)

இழுவலைகளை படிப்படியாக நிறுத்த முடியும். இந்திய - இலங்கை மீனவர்கள் தொப்புள் கொடி உறவாக மீன் பிடிக்க இரு நாட்டு அரசாங்கமும் பேசி தீர்வு காண வேண்டும் என இந்திய இராமேஸ்வரம் மாவட்டத்தின் விசைப்படகு மீனவ சங்கத்தின் தலைவர் பி.ஜேசுராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற இந்திய - இலங்கை மீனவ சங்க பிரதிநிதிகளின் பேச்சுகளின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

நீண்ட காலமாக இருந்து வரும் இந்திய - இலங்கை மீனவர் பிரச்சுனைக்குத் தீர்வு காண வேண்டி இந்தியாவின் இராமநாதம் மாவட்டத்தில் இருந்து வந்து 5 பேர் கொண்ட குழுவாக நான்கு மாவட்ட இலங்கை மீனவ சங்க பிரதிநிதிகளுடன் எங்கள் தொப்புள் கொடி உறவுகளுடன் எமது நிறைகுறைகளை பேசி மகிழ்ந்தோம். அவர்களுடைய கஷ்ட நிலைகளை எங்களிடம் கூறினார்கள். எங்களுடைய கஷ்ட் நிலமைகளையும் நாங்கள் கூறினோம்.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்ற அடிப்படையில் இந்த பேச்சு இருந்தது. சுமுகமாக நடைபெற ஏற்பாடு செய்த இலங்கை மீனவ சமாசத்திற்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

கடந்த 9 வருடங்களுக்கு முன் இரண்டு அரசாங்கங்களும் பேசிய பின்னர் மீனவர் பிரச்சினை பேசப்படவில்லை. 9 வருடங்களில் இரண்டு நாட்டு மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் பாதிப்பை எவ்வாறு நிறுத்துவது என்று பேசப்பட்டது. அவர்களது




கோரிக்கை இந்திய இழுவலைகளை முற்றாக நிறுத்த வேண்டும். அதனை நிறுத்தினால் கடல்வளம் பாதுகாக்கப்படும் என்று கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

நாங்கள் இந்த இழுவலையை படிப்படியாக குறைப்பதற்கு இந்திய மற்றும் தமிழக அரசாங்கம் ஊடாக சம்மதிக்கின்றோம் எனக் கூறினோம். அடுத்த கட்டமாக ஏனைய மாவட்ட மீனவ அமைப்புக்களையும் ஒன்று திரட்டி இந்திய அரசு, தமிழக அரசு, இலங்கை அரசாங்கம் உதவியுடன் இதனைப் பேசி நல்லதொரு தீர்வை அடுத்த கட்டமாக எட்ட முடியும் எனக் கூறியுள்ளோம்.

வயிற்றுப் பிழைப்புக்காக மீன் பிடிக்கும் மீனவர்களை இலங்கை அரசாங்கம் தமது சட்டத்தின் படி 6 மாதம், ஒரு வருடம், 2 வருடம் என சிறை வைத்துள்ளார்கள். அந்த மீனவர்கள் மனிதபிமான முறையில் விடுவிக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்ச்னைக்கு நிரந்தரமாகவும் தீர்வு காண வேண்டும் என கோரியுள்ளோம்.

அடுத்த கட்ட பேச்சுகளின் போது அதனை செய்யலாம் என இலங்கை மீனவர்கள் கூறியுள்ளார்கள். நிச்சயமாக இலங்கை, இந்திய அரசாங்கங்கள் பேசி இதற்கு ஒரு தீர்வை எட்ட வேண்டும். இந்திய - இலங்கை கடற்பரப்பு மிகக் குறைவாக உள்ளது. அதலும் கச்ச தீவு இலங்கைக்கு கொடுத்ததால் கடல் பரப்பு குறைவாக உள்ளது. அதனால் தான் எல்லை தாண்டும் பிரச்சினை ஏற்படுகிறது.

இதில் இந்திய - இலங்கை மீனவர்கள் பாதிக்கப்படுகின்றோம். நிலைமையை கருத்தில் கொண்டு இரண்டு அரசாங்கங்களும் இணைநத்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

அரசியல் தலைவர்கள் தமது அரசியல் இலாபத்திற்காக சில கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள். அது எமக்கு தெரியாது. எங்களுடைய எண்ணம், கச்ச தீவை மீட்பது அல்ல. இரு நாட்டு மீனவர்களும் தொப்புள் கொடி உறவாக அப் பகுதியில் மீன் பிடிக்க வேண்டும். இரு பகுதி மீனவர்களும் பாதிக்காத வகையில் இரு நாட்டு அரசாங்கமும் நல்ல முடிவை எடுக்க வேண்டியது கட்டாயம். அவர்கள் எடுப்பார்கள் என நாங்கள் நம்புகின்றோம். - எனத் தெரிவித்தார்.

# விசேட கற்கைகளுக்கான அனுமதிகளுக்கு இனி நாடளாவிய ரீதியில் பொதுப் பரீட்சை!

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் நுண்கலை மற்றும் குறிப்பிட்ட சில சிறப்பு பட்டப்படிப்பு அனுமதிக்குத் தேவையான பொது உளச்சார்பு மற்றும் செயன்முறைப் பரீட்சைகளுக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நாடளாவிய ரீதியில் பொதுமைப்படுத்தப்பட்ட பரீட்சையை அறிமுகப்படுத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் அந்தந்தப் பல்கலைக்கழகங்கள் தனித்தனியாக மேற்கொண்டு வந்த இந்தத் தெரிவுப் பரீட்சைகளை இனி பரீட்சைகள் திணைக்களம் நடத்தும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மாற்றம் குறித்த முக்கியமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியன்று நடைபெறவுள்ளது.

இதுவரை, நுண்கலை, மொழிபெயர்ப்பு கற்கைகள், விளையாட்டு விஞ்ஞானம், உடற்கல்வி போன்ற பாடப் பிரிவுகளுக்காக ஒவ்வொரு பல்கலைக்கழகமும் தனித்தனியாக பொது உளச்சார்பு மற்றும் செயன்முறைப் பரீட்சைகளை நடத்தி வந்தன. ஆனால், நாடாளுமன்றத்தின் பொது நிறுவனங்களுக்கான குழுவின் (கோப்) பரிந்துரைகள் மற்றும் முறைப்பாடுகளின் காரணமாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பொது முறைமையைப் பின்பற்றத் திட்டமிட்டுள்ளது.

இந்த மாற்றத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் உயர் மட்ட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள், பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் ஆகியோர் பங்கேற்று, பரீட்சைகள் திணைக்களத்தின் கீழ் இந்தப் பரீட்சைகளை நடத்தும் வாய்ப்புகள் தொடர்பில் ஆராயவுள்ளனர்.

இந்த மாற்றம், மாணவர் தெரிவில் வெளிப்படைத்தன்மை, ஒருமைப்படைவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்வதுடன், தற்போதைய முறையில் உள்ள குறைகளையும் சரி செய்ய உதவும் என நம்பப்படுகிறது.




# முல்லையில் 239 கசிப்பு விற்பனையாளர்கள்; தடுக்க மிகக் கடுமையான நடடிக்கை தேவை

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ரவிகரன் எம்.பி. வலியுறுத்தல்

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய ஐந்து பிரதேசசெயலாளர் பிரிவுகளிலும் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபடுபவர்களாக 239 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும், வெலி ஓயாப் பிரதேசசெயலாளர் இது தொடர்பில் தரவுகளைத் திரட்டும்போது அச்சுறுத்தல்களுக்கு உள்ளானமையால், இது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க முடியவில்லையெனவும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நேற்று சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில் சட்டவிரோத மது மற்றும் போதைப் பொருள்களைத் தடுக்க மிகக் கடுமையான நடவடிக்கை தேவை என வன்னி மாவட்ட நாடாளு–மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபடுபவர்களாக கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் 87 பேரும், புதுக்குடியிருப்பில் 28 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 50 பேரும், துணுக்காய் பிரதேசத்தில் 34 பேரும், மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் 40 பேருமாக முல்லைத்தீவுமாவட்டத்தில் மொத்தம் 239 நபர்கள் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபடுவதாக இங்கே சுட்டிக்காட்டப்பட்டது.

அத்தோடு சட்டவிரோத மது விற்பனையாளர்கள் தொடர்பில் விவரங்களைத் திரட்டும்போது அச்சுறுத்தல் நிலைமைகள் ஏற்பட்டதாகத் தெரிவித்து வெலிஓயா பிரதேசசெயலாளரால் இது தொடர்பான அறிகக்கை கையளிக்க முடியாமல் போனதாகவும் இதிலே சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையிலே அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையால் அதிகளவானோர் முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழக்கின்ற நிலமைகள் காணப்படுகின்றன.

பல கிராமங்களுக்கு மக்கள் குறைகேள் சந்திப்பிற்காகச் சென்றபோது மக்கள் போதைப்பொருள் ஊடுருவல்கள் அதிகரித்துள்ளமை தொடர்பிலும், அதனால் ஏற்படுகின்ற மிக மோசமான பாதிப்பு நிலமைகள் குறித்தும் முறையிட்டு கண்ணீர் வடிக்கின்றனர்.

குறிப்பாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட நான்கு கிராமங்களில் ஏறக்குறைய 48 பேரளவில் போதைப் பொருள் பாவனையால் உயிரிழந்துள்ளனர் என மக்கள் முறையிட்டனர்.

அதேபோல் 2009ஆம் ஆண்டிற்கு முன்னர், விடுதலைப் புலிகளின் காலத்தில் இவ்வாறான போதைப்பொருள் ஊடுருவல்களும், பாவனைகளும் இருக்கவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையான அரச படையினர் காணப்படுகின்றனர். குறிப்பாக இரண்டு பொதுமக்களுக்கு ஒரு படையினர் காணப்படுகின்றனர்.

இவ்வாறு அதிக படையினர் இருக்கத் தக்கதாக இவ்வாறு போதைப்பொருள் ஊடுருவல்களும், போதைப்பொருள் பாவனையும் அதிகரித்திருக்கின்றன. இது தொடர்பில் உரிய தரப்பினர் ஏன் கவனம்செலுத்தவில்லை?

அதேவேளை சில பொலிசாருக்கும் போதைப் பொருள் விற்பனையாளர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் காணப்படுவதாகவும் மக்கள் எம்மிடம் முறையிடுகின்றனர்.

இந்நிலையில் போதைப்பொருள் விற்பனையாளர்களின் தரவுகள் ஒவ்வொரு பிரதேச செயலாளர்களிடமும் கோரப்பட்ட நிலையில், இது தொடர்பில் தரவுகளைச் சேகரித்தால் தமக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென வெலிஓயா பிரதேசசெயலாளர் தெரிவித்திருக்கின்றார். அவ்வாறாயின் இங்கு யாருடைய அரசாங்கம் நடக்கின்றது? இவ்வாறாகசட்டம்ஒழுங்குகளை மீறுகின்ற வகையிலான செயற்பாடுகள் இடம்பெறுமாயின் இங்கு பொலிஸார் எதற்கு?

இந் நிலைரில் அரசாங்கம் திட்டமிட்டு போதைபொருள் ஊடுருவல்களை எமது பகுதிகளில் மேற்கொள்வதாகவும் மக்களால் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றன.

இந் நிலையில் கசிப்பு, கஞ்சா, ஐஸ் எனப் பல்வேறு போதைப்பொருள் ஊடுருவல்கள் அதிகரித்திருக்கின்றன.

இத்தகைய சூழலில் ஆளுநர், கூட்டுறவுப் பிரதியமைச்சர், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச்செயலாளர், உரிய அதிகாரிகள் அனைவருமாக இந்த விடயம் தொடர்பில் மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து இத்தகைய போதைப் பொருள் ஊடுருவல்கள், பாவனைகளைத் தடுக்கவேண்டும்.

இல்லையேல் சிறிய காலத்திற்குப் பிற்பாடு இங்கு மக்க வசிக்கமாட்டார்கள், கசிப்பு உற்பத்தி செய்யப்படும் பானைகளும் தளபாடங்களுமே காணப்படும். இவ்வாறாக இந்த விடயத்தில் நிலமைகள் மோசமடைந்து செல்கின்றன.

இந்த நிலைமைகள் தொடர்ந்தால் தேசியமக்கள் சக்தி அரசாங்கத்தையும் மக்கள் வெறுக்க வேண்டிய – மக்கள் வெறுக்கக்கூடிய – நிலை உருவாகும்.

எனவே இந்தவிடயத்தில் கூடிய கவனம் செலுத்தி சட்டவிரோத போதைப் பொருட்களை தடுப்பதற்கு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படவேண்டும் – என்றார்.

# வவுணதீவில் மாடு திருடிய சந்தேக நபர் மருத்துவ சிகிச்சை பலனின்றி மரணம்

## அவரை மடக்கிப் பிடித்த பொதுமக்கள் நையப்புடைத்தமையால் விபரீதம்

(கனகராசா சரவணன்)

மட்டு வவுணதீவு பிரதேசத்தில் மாடுகளைத் திருடிய நபர் ஒருவரை பொதுமக்கள் மடக்கி பிடித்து நையப்புடைத்த நிலையில் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை அதிகாலை ஒரு மணிக்கு அவர் உயிரிழந்துள்ளார் எனவும், அவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும், அடையாளம் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளுமாறும் பொது மக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள புதுமண்டபத்தடி பிரதேசத்தில் மாடு திருடிய இளைஞன் ஒருவரை பொதுமக்கள் மடக்கி பிடித்து நையச்ப்புடைத்த பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து அவரை மட்டு பே-ாதனா வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்யப்பட்டமையையடுத்து அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அவரை சிறைச்சாலை நிர்வாகம் வைத்திய சாலையில் பெறுப்பேற்றது. சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் அவர் சிகிசை பெற்று வந்துள்ளார்.

இந்த நிலையில் இந்த நபர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை ஒரு மணிக்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் இவர் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளுமாறும் பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# திருமலை இந்து மயான தகனக் கூடம் திருத்தப் பணி நேற்றுத் தொடங்கியது

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை இந்து மயானத்தில் நகராட்சி மன்றத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த தகனக் கூடம் சிறிது காலமாக பழுதடைந்திருந்த நிலையில் திருத்தப்பபணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.க.ரொஷான் பிரிய சஞ்ஞனவின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பணிகள், திருகோணமலை நகர சபையின் ஒத்துழைப்புடன் விரைவில் நிறைவு செய்யப்படும் என்றும், அதன் பின்னர் இந்தத் தகன கூடம் பொது மக்கள் பயன்பாட்டிற்குக்கு வழங்கப்படும் என்றும் அறிய முடிகின்றது.

இத்திருத்தப்பணிகள் குறித்து கூறிய நாடாளுமன்ற உறுப்பினர்

இந்தச் சுடுகாட்டில் உள்ள நெரிசலைக் குறைக்கும் வகையில், எதிர்காலத்தில் திருகோணமலைக்கு மற்றுமொரு சுடுகாடு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று கூறினார்.

இன்றைய திருத்த ஆரம்ப பணிகளின் போது திருகோணமலை நகர சபையின் செயலாளர் எஸ்.ஜெயவிஷ்ணுவும் சமுகமளித்திருந்தார்.





# கற்பிட்டியில் சிதைவடைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிப்பு!

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

கற்பிட்டியின் தில்லையடி தேத்தாவாடி எல்லைப் பகுதியில் ஓடைக் கரையில் சிதைவடைந்து நிலையில் ஆண் ஒருவரின் சடலம். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

இந்தச் சடலம் தொடர்பில் இதுவரையில் முழுமையான தகவல்கள் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ள பொலிஸார் சடலம் புத்தளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது எனவும் கூறினர்.

இச் சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மரண அறிவித்தல்



## சட்டத்தரணி
## ஆன் சுமங்கலா குலநாயகம்

நெடியகாடு வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவரும் மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சட்டத்தரணி செல்வி ஆன் சுமங்கலா குலநாயகம் (பழைய மாணவி – சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) நேற்று (26.03.2025) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் சேவியர் குலநாயகம் – தேவஜோதி தம்பதியரின் அன்பு மகளும், ஜோசப் தர்மர், ஜேம்ஸ் நிமலன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மிலோனின் இன் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**36, மார்ட்டின் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**தொடர்பு: 077 883 1444**
**077 489 6306**

# பா.ஜ.க.- அ.தி.மு.க. கூட்டணியின் நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டது

## இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி தெரிவிப்பு



"எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, அ.தி.மு.க. நிர்வாகிகளோடு டில்லி சென்றார். உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து நீண்ட நேரம் பேசியிருக்கிறார். அதாவது கூட்டணிக்கான நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டது. திருமணம் எப்போது என்றுதான் தெரியவில்லை."

– இவ்வாறு இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் கூறியுள்ளார்.

இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட மாநாடு சேலத்தில் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்க வந்திருந்த அக்கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

"மும்மொழிக் கொள்கையால் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே அறிவிக்கப்படாத போர் நடந்து கொண்டுள்ளது. ஆனால், இது தனிப்பட்ட கட்சியின் பிரச்சினை அல்ல. தேசநலன் தொடர்புடையது. நாட்டின் அரசமைப்பில் 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

அனைத்து மொழிகளையும் சமமாக பாவிக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. மக்களால் பேசப்படாத சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கு அதிக நிதியும், செம்மொழியான தமிழின் வளர்ச்சிக்கு குறைந்த நிதியும் ஒதுக்கப்படுகிறது. இதுபோன்ற செயலை கைவிட வேண்டும். மத்திய அரசு, தேசிய கல்விக் கொள்கையை திணிக்க முயற்சிக்கிறது.

பா.ஜ.கவுடன் இனி ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி இப்போது, தமிழகபிரச்சினைகளைப்பற்றிஅமித்ஷாவிடம் பேசியதாக தெரிவித்துள்ளார். தமிழகத்துக்கான பிரச்சினை என்று சொன்னால், ஒரு சில நிமிடங்கள் பேசிவிட்டு மனுவை வாங்கிக் கொண்டு அனுப்பி இருப்பார்கள். ஆனால், அவருக்கு என்ன நெருக்கடி என்று தெரியவில்லை. கோடநாடு பிரச்சினையா? வருமான வரி பிரச்சினையா? இரட்டை இலை சின்னம் தொடர்பான பிரச்சினையா? என எந்த நெருக்கடி என்று தெரியவில்லை.

அமலாக்கத்துறையையும், வருமான வரித்துறையும் பா.ஜ.க. அரசு எப்படி பயன்படுத்தி வருகிறது என்பது மக்கள் அனைவருக்கும் தெரியும். அமலாக்கத்துறையை உச்ச நீதிமன்றம் பலமுறை கண்டித்துள்ளது." என்றார்.

# அரசியல் சூழலுக்கு ஏற்றவாறு கூட்டணியில் மாற்றம் ஏற்படும்

## எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு



எந்த கூட்டணியாவது நிலையாக இருந்ததுண்டா, அரசியல் சூழலுக்கு ஏற்றவாறு கூட்டணியில் மாற்றம் ஏற்படும் என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

டில்லியில் அமித் ஷாவுடன் நடந்த சந்திப்பு குறித்து அவர் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"டில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தது மக்கள் பிரச்சினைகளுக்காக தான். மக்கள் பிரச்சினைகள் குறித்து கோரிக்கை மனுவை அளித்துள்ளோம். காலையிலே இது குறித்து விளக்கமளித்துவிட்டேன்.

எந்த கூட்டணியாவது நிலையாக இருந்ததுண்டா?, அரசியல் சூழலுக்கு ஏற்றவாறு கூட்டணியில் மாற்றம் ஏற்படும். அதை எப்படி இப்போது கூற முடியும். 2019 ஆம் ஆண்டுக்கான கூட்டணியை பெப்ரவரி மாதத்தில் தான் அறிவித்தோம். தேர்தல் வரும்போது தான் ஒத்த கருத்தோடு இருக்கும் கட்சிகளுடன் பேசி முடிவெடுக்கப்படும். இப்போது கூட்டணி இருக்கிறதா, இல்லையா என கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்.

அமித் ஷா கூறியது அவரது கட்சியின் விருப்பம். அ.தி.மு.கவை பொறுத்த வரை கூட்டணி குறித்து முடிவுசெய்யும் போது, அனைத்து பத்திரிகையாளர்களையும் அழைத்து தெரிவிக்கப்படும். அது குறித்து கவலையே பட வேண்டாம். எங்களுக்கு, தி.மு.கவை வீழ்த்த வேண்டும். அதுதான் எங்களின் ஒரே குறிக்கோள். மக்கள் விரோத ஆட்சியான தி.மு.கவை, தமிழகத்தில் இருந்து அகற்ற வேண்டும். அதற்காக அ.தி.மு.க. அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்." என்றார்.



# நடிகர் மனோஜ் பாரதியின் உடலுக்கு முதல்வர் ஸ்டாலின் நேரில் அஞ்சலி

இயக்குநர் பாரதிராஜாவின் மகனும், நடிகருமான மறைந்த மனோஜ் பாரதி உடலுக்கு முதல்வர் ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

இயக்குநர் பாரதிராஜாவின் மகனும், நடிகருமான மனோஜ் பாரதிராஜா மாரடைப்பு காரணமாக நேற்று முன் தினம் உயிரிழந்தார். அவருக்கு வயது 48. அவரது மறைவுக்கு திரையுலக பிரபலங்களும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், சென்னை நீலாங்கரையில் உள்ள பாரதிராஜாவின் வீட்டில் அஞ்சலிக்காக மனோஜின் உடல் வைக்கப்பட்டிருக்கும் நிலையில், தமிழக முதல்வர் ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். அவருடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மா. சுப்பிரமணியன் உள்ளிட்டோரும் அஞ்சலி செலுத்தினர்.

இதனிடையே, இது குறித்து உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பக்க பதிவில்,

“திரைப்பட நடிகரும் – இயக்குநர் இமயம் பாரதிராஜா சாரின் அன்பு மகனுமான சகோதரர் மனோஜ் கே.பாரதி, உடல்நலக்குறைவால் மறைந்த நிலையில், நீலாங்கரையில் உள்ள அவர்களது இல்லத்துக்கு சென்று, முதல்வருடன், மனோஜின் உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம். அவரைப்பிரிந்து வாடும் பாரதிராஜா உள்ளிட்ட அவரது குடும்பத்தினர், நண்பர்களுக்கு ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்தோம்” எனத் தெரிவித்துள்ளார்.







# தென் கொரியாவில் ஏற்பட்ட காட்டுத்தீயில் சிக்கி 16 பேர் பலி

தென்கொரியாவில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் 16 பேர் உயிரிழந்துள்ளனர். 19 பேர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தென் கொரியாவின் தென்கிழக்கு நகரமான, உய்சோங்கில் ஏற்பட்ட காட்டுத்தீயானது பலத்த காற்று மற்றும் வறண்ட வானிலை காரணமாகக் கட்டுப்பாட்டை மீறி வேகமாகப் பரவுவதாகத் தென் கொரிய அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீயை கட்டுப்படுத்த 9,000 தீயணைப்பு படையினர் , 130 இற்கும் மேற்பட்ட ஹெலிக்கொப்டர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

காட்டுத்தீயால் சுமார் 43,000 ஏக்கருக்கும் அதிகமான வனப்பகுதி மற்றும் 1,300 ஆண்டுகள் பழமையான பௌத்த கோவில் உட்பட நூற்றுக்கணக்கான கட்டடங்கள் தீக்கிரையாகின.

உய்சோங் நகரத்துக்கு அருகில் சியோங்சாங் கவுன்டியில் உள்ள ஒரு சிறைச் சாலையிலிருந்து சுமார் 2,600 கைதிகளை இடமாற்றம் செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.






# ஹமாஸ் வெளியேற வேண்டும்; பாலஸ்தீனில் மக்கள் போராட்டம்

ஹமாஸ் அமைப்பு காசாவை விட்டு வெளியேற வேண்டும் என வலியுறுத்தி பாலஸ்தீனத்தில் போராட்டம் ஒன்று நடைபெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசா மக்களைப் பாதுகாக்க ஹமாஸ் விரும்பினால் அந்தப் பகுதியை விட்டு வெளியேற வேண்டும் எனப் போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

போரை நிறுத்த கோரி வடக்கு காசாவின்பல்வேறுபகுதிகளில்மக்கள்போராட்டம் நடத்தியுள்ளனர்.

# கருங்கடல் போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் - ரஷ்யா இணக்கம்



கருங்கடல் பகுதியில் கடற்படை போர் நிறுத்தத்துக்கு உக்ரைனும் ரஷ்யாவும் இணங்கியுள்ளன என அமெரிக்கா அறிவித்துள்ளது.

சவூதி அரேபியாவில் 3 நாள்கள் இடம்பெற்ற அமைதிப் பேச்சுவார்த்தையின்பின்னர்அமெரிக்காவுடனானதனித் தனி ஒப்பந்தங்களில் இந்த நாடுகள் இந்த இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன.

இது கருங்கடல் ஊடான ஒரு முக்கிய வர்த்தக பாதையை மீண்டும் திறப்பதற்கு வழிவகுத்துள்ளது. இந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் விளக்கியுள்ள அமெரிக்கா, “நீடித்த மற்றும் நீண்ட அமைதியை” நோக்கிச் சகல தரப்பும் பணியாற்றுவார்கள் என அறிவித்துள்ளது.

அதேநேரம், ஏற்கனவே ஒப்புக் கொண்ட வகையில் இரு தரப்பிலும் உள்ள எரிசக்தி உட்கட்டமைப்புகள் மீதான தாக்குதல்களை நிறுத்துவதில் காணப்படும் சிக்கல்களை நீக்குவது தொடர்பிலும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தங்களது உணவு மற்றும் உர வர்த்தகத்திற்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்பட்டதன் பின்னரே கருங்கடலில் போர் நிறுத்தம் அமுலாகும் என ரஷ்யா அறிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 27.03.2025




இன்று வளமான நாளாக இருக்கும். இன்று நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய இலக்கு களை அடைவீர்கள். உங்களிடம் இன்று மன நிறைவு காணப்படும்.

பணியில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் செயல்திறன் மூலம் உங்களுக்குள் மறைந் திருக்கும் திறமை வெளிப்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பண வரவு கண்டு மகிழ்வீர்கள். எதிர்பாராத வகையிலிருந்து பண வரவு கிடைக்க வாய்ப்புள்ளது.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




எதிர்மறையான விளைவுகளை தவிர்க்க அறிவார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். அமைதியின்மையை சமாளிக்க வேண்டும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை அவசியம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேராமல் இருக்க கவனமாக பணியாற்ற வேண்டும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத் தகாத சூழ்நிலையை சந்திக்க நேரலாம்.

உங்கள் குடும்பத்தில் எழும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் குறைவு. நிதியில் ஸ்திரத்தன்மை காண கையிலுள்ள பணத்தை சேமிக்க வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நீங்கள் உயர்நிலை அடைவீர்கள் மற்றும் ஆறுதல் பெறுவீர்கள். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ள தால் கவனமாகப் பணியாற்ற வேண்டும். தவறுகள் செய்து பின் அவற்றை சரி செய்வதை விட முதலிலேயே தவறுகள் நேரா வண்ணம் பார்த்துக் கொள்வது சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்வுப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி மகிழ்சிகரமாக இருக்காது. பண இழப் பிற்கான வாய்ப்பு உள்ளது. பண விஷயங்களை கையா ளும்போது கவனமாக பாதுகாப்புடன் கையாளவும்.




இன்று நம்பிக்கை நிறைந்திருக்கும் சூழல் காணப்படும்.உங்கள் இலக்குகளை அடைவதற்கான தைரியமும் உறுதியும் உங்களிடம் காணப்படும். மொத்தத்தில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் தன் னம்பிக்கை நிறைந்திருக்கும்.

நீங்கள் மனதளவில் வலுவுடனும் புத்துணர்ச்சியுடனும் காணப்படுவீர்கள். பணியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் சிறந்த தகவல் தொடர்பு கொண்டிருப்பீர்கள். உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள்.

இன்று உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று தேக ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்கும்.




நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். இதனால் எளிதாக வெற்றி கிடைக்கும். பயனுள்ள முடிவுகள் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக இருக் கும். நீங்கள் பணிகளை உற்சாகத்துடன் எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் புரிந்துணர்வை வளர்த் துக்கொள்ள முயல்வீர்கள். இந்தப் போக்கு நல்லுறவை வலுப்படுத்தும்.

இன்று பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கான ஊதியம் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். எந்த விஷ யத்தையும் எளிதாக எடுத்துக் கொள்வது சிறந்தது.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்பு களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். கவனமுடன் பணியாற்றினால் பணியில் ஆர்வம் வளரும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொண்டு உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவுக்கு உகந்ததல்ல.

இன்று கணிசமான தொகை பராமரிக்க இயலாது. சம்பாதிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று நல்ல தரமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற உங்களின் விருப்பம் காரணமாக அதிகமான சிந்தனை காணப்படும். அமைதியாக உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடன் பிரச்சினை வராமல் இருக்க நல்லுறவு கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடனான பிரச்சினை என்ன வென்று தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அமைதி யுடனும் கட்டுப்பாடான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

அதிக பணம் சம்பாதிப்பது இன்று சிறிது கடினம். நல்ல பணப்புழக்கதுக்கான அமைப்பு இருக்காது.




இன்று உங்களுக்கு வெற்றிகர மான நாள். நீங்கள் மகிழ்ச்சியுடன் உங்கள் பணிகளை எளிதாக மேற் கொள்வீர்கள். உங்களிடம் அதிக ஆற்றலும் விழிப்புணர்வும் காணப்படும். உங்கள் வளர்ச்சியில் உங்களுக்கு மன நிறைவு காணப்படும்.

உங்கள் பணியில் முன்னேற்றகரமான பலன்கள் இருக்கும். அனைத்துப் பணிகளையும் தன்னிச்சையாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பணம் காணப்படும். உங்கள் வங்கியில் அதிக பணம் பராமரிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.03.2025




உங்கள் இலக்குகளை அடைவதில் தமாதங்கள் காணப்படும். பொறுமையுடன் அணுக வேண்டும். அதற்கேற்றபடி திட்டமிட வேண்டும். வழிபாடு மற்றும் மந்திரங்கள் உங்கள் மனதிற்கு ஆறுதல் அளிக்கும்.

உங்கள் பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். பணியிடத்தில் சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் துணையின் அன்பும் மதிப்பும் பெற நீங்கள் பொறுமை காக்க வேண்டும். உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவு பாதிக்கும். எனவே அதனை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. எதிர்மறை விளைவுகளை தடுக்க நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இன்று கவனமாக திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

இன்று உங்கள் பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாக பணியாற்ற வேண்டும்.

உணர்ச்சி வசப்படுவதனால் உங்கள் துணையுடனான உறவின் இனிமை பாதிக்கும். உங்கள் துணையுடன் நேர்மையாக மனம் திறந்து உரையாடுங்கள்.

இன்றுபணஇழப்பிற்குவாய்ப்புள்ளது.எனவேபணத்தை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்களுக்கு தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். வெளிப்படையாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத சூழ்நிலையை நீங்கள் சந்திக்க நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்த்து அமைதியாக இருப்பதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கிக் கொள்ளலாம்.பேசுவதனால் தவறான புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று ஏற்படும் செலவுகள் காரணமாக கவலை ஏற்படும்.சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். இன்று திறம்பட செயலாற்றுவீர்கள். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்காலத்துக்கு திட்டமிடுவீர்கள்.

பணியிடத்தில் நற்செய்தி காத்திருக்கின்றது. உங்கள் திறமைகளை நிரூபிக்க நல்ல வாய்ப்பு உள்ளது. உங்கள் திறமைகளை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே இனிமையான தருணங்கள் ஏற்படும். உங்கள் துணையுடன் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று சேமிப்பு பழக்கத்தை மேற்கொள்ளும் நிலையில் காணப்படுவீர்கள்.






# யாழ். பிராந்தியப் பொலிஸாரின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வுகள்

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸாரின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வுகள் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இதன்பொது வடக்கு மாகான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் சீ.ஏ.தனபால, யாழ் மாவட்ட பிரதிபல பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஸ்ரீமோகன், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சர்வ மதத் தலைவர்கள், முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது முஸ்லிம் மதத் தலைவர்களால் வடக்கு மாகான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் சீ.ஏ. தனபாலவிற்கு குர்ஆன் நூல் அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டது.



